1968 மார்ச் 14]

சீர்காழி மிட்டாய் தொழிற்சாலை

* 217 விஞ.—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழியில் உள்ள மிட்டாய் தொழிற் சாலையில் கலப்படம் செய்யப்படுவதாக அரசினருக்குப் புகார் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். அந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட மிட்டாய்களில் நான்கு வகைகளை பரி சோதனை செய்ததில் அவை கலப்படமற்றவை என்று அறிவிக்கப்பட்டது.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, அங்கே இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன பாரத் கன்ஃபெக்ஷனரி, சக்தி கன்ஃபெக்ஷனரி என்ற இரண்டு மிட்டாய்க் கம்பெனிகள் இருக்கின்றன.

MR. SPEAKER : Under Rule 31 (2) a question must not publish any name not strictly necessary to make the question intelligible. கூடியவரையில் பெயர்களைக் குறிப்பிடாமல் கேள்வி கேட்பது நல்லது. இரண்டு கடைகள் என்று சொல்லுங்கள். கனம் உறுப்பினரை 31(2) விதியின்படி கேள்வி கேட்குமாறு கூறுகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, இரண்டு மிட்டாய்க் கம்பெனிகள் அங்கு இருக்கின்றன. அவைகளில் அவற்றில் எந்தக் கம்பெனியில் கலப் படம் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இங்கு புகார் வந்திருப்பது நவசக்தி மிட்டாய்க் கம்பெனியைப்பற்றி.

THIRU K. VINAYAKAM : What were the repercussions of the consumption of this adulterated confectionary? Were there fatal accidents or were there only passing changes in health ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அங்கே எடுக்கப்பட்ட மிட் டாய்கள் கலப்படமற்றவை என்று ரிப்போர்ட் வந்திருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: தலைவர் அவர்களே, கலப்படம் அதிகமாகிக் கொண்டு வருவதால் விபரீதமான ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. காரைக்குடியில் விஷம் கலந்த உணவை 300 பேர் அருந்தியதில், 2 பேர்கள் இறந்துவிட்டார்கள். இந்த மாதிரியான நிலைமை நாட்டில் இருப்பதால் பயங்கரமான விளைவுகள் ஏற்படும். ஆகவே, கலப்படம் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து, வேண்டுமானல் தூக்குத் தண்டனையாவது கொடுத்து, கலப்படம் ஏற்படாமல் தடுக்க அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: காரைக்குடியில் ஏற்பட்ட விபத்து கலப்படம் செய்த காரணத்தால் ஏற்பட்டதல்ல. ஒரு திருவிழா விற்கு செய்யப்பட்ட பிரியாணியை மறுநாள் சாப்பிட்டதால் அதில் விஷப்பொருள்கள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) கோவையில் பஞ்சாலைகளை மூட ஆலை முதலாளிகள் முடிவு

திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி, பொது ஜனமுக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க வேண்டி, பேரவையை ஒற்றிவைக்கக் கோரி ஒரு அறிவிக்கையைக் கொடுத்திருக்கிறேன்.—

> "நமது ராஜ்யத்திலுள்ள எல்லாப் பஞ்சாலைகளையும் 15 தினங்கள் மூடப்போவதாகவும், 15 தினங்களுக்குப் பிறகும் அடுத்த நடவடிக்கை என்ன என்பதைப் பற்றியும் ஆலோசிக்கப்படுமென்றும், தென்னிந்திய மில் முதலாளிகள் முடிவு செய்துள்ளதால், இதனால் பஞ்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் இந்த மிக அவசர அவசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையை ஒற்றிவைக்க வேண்டுமென கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போதுள்ள நிலைமையில் ஏற்கனவே எங்கு பார்த்தாலும் கதவடைப்புகள் நடைபெற்று, அதனால் பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய சர்க்கார் நடவடிக்கை எடுக்க முன்வந்திருக்கும் நேரத்திலே, ஏதோ மத்திய சர்க்காரை எதிர்ப்பதுபோல் பாவனை காட்டி, இந்தச் சர்க்காருக்குத் தொல்லை கொடுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாலைகளில் தேக்கம் இருக்கிறது, விற்பனையாகவில்லை என்று காரணங்களைக் காட்டித் தொல்லை தரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இதன் காரணமாகப் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்படும். அதன் காரணமாகப் பெரிய அளவில் விளைவுகள் ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் இது சம்பந்தமாக அவசரமும், அவசியமும், முக்கியத்துவமும் வாய்ந்த இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க இந்த சபையை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. என். குமாரசாமி, திரு. எம். பூபதி முதலியவர்களும் இதே காரணத்தையொட்டி ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆலைச் சொந்தக்காரர்கள் எடுத்த முடிவு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஏப்ரல் 1-ம் தேதி முதல் 15 நாட்களுக்கு மில்களை மூடிவிட்டு நூல் உற்பத்தியைக் குறைக்கலாமா என்று யோசித்து வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக நூல் பிரச்சினை, மற்றப் பிரச்சினைகள் எல்லாம் இருந்து வருகின்றன. நூல் விலை திடீரென்று குறைந்துவிட்டதன் காரணமாகவும் இம் மாதிரியான பிரச்சினைகள் தோன்றுகின்றன. 175 ஆலைச் சொந்தக்காரர்கள் சவுத் இண்டியன் மில் ஓனர்ஸ் அசோசியேஷன் சார்பாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 56,400 பேல்கள் நூல் தேக்கமுற்றிருக்கிறது. இதன் மதிப்பு 9½ கோடி ரூபாய் பெறுமானமுள்ளது. மற்றச் செலவினங்களும் ஏற்பட்டிருக்கின்றன. 1964-ல் 4,654 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியானது. 1966-லே 4,239 மில்லியன் மீட்டருக்குக் குறைந்து விட்டது. ஆனால் திட்டப் பிரகாரம் 4,900 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி